# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8069829
C

1. District மாவட்டம் : மதுரை PS காவல்நிலையம்: ஊ.த.க பிரிவு Year ஆண்டு: 2020 FIR No. மு.த.அ. எண்: 11/2020 Date நாள்: 26.11.2020

2. (i) Act சட்டம்: 7 of PC Act 1988 Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as amended by the PC amendment Act 2018
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to நாள் வரை: (1) 17.11.2020 at 20.00 hrs (2) 23.11.2020 at 20.00 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.11.2020 Time நேரம் : 15.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 26.11.2020 Time நேரம் : 15.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 30 கி.மீ மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி செக்கானூரணி, காவல் நிலையம், மதுரை மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. S. நல்லதம்பி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. சுந்தரராஜ்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 60/2020 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி வீரலம்பட்டி, சாத்தங்குடி அஞ்சல் திருமங்கலம் தாலுகா, மதுரை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி. அனிதா, காவல் ஆய்வாளர், செக்கானூரணி காவல் நிலையம், மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 26.11.20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

26.11.2020 at 16.45 hrs

Name: பெயர் த. திரியதர்ஷா
Rank: நிலை காவல் ஆய்வாளர்,
இ.த.க. பிரிவு,
மதுரை 26.11.2020

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது;

இன்று 26.11.2020-ஆம் தேதி மதியம் 15.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்த போது மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா, சாத்தங்குடி (அஞ்சல்), எரமலம்பட்டி, சந்தனத்தேவர் மகன் நல்லதம்பி என்பவர் என்னிடம் ஆஜராகி எழுத்து பூர்வமான புகார் மனுவை கொடுத்தார். அந்தப் புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர், S.நல்லதம்பி, வயது 60, த/பெ சந்தனத்தேவர், எரமலம்பட்டி, சாத்தங்குடி (அஞ்சல்), திருமங்கலம் தாலுகா, மதுரை மாவட்டம். பெறுநர், உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. அய்யா, நான் மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா, எரமலம்பட்டியில் உள்ள எனது தோட்டத்து வீட்டில் கடந்த மூன்று வருடமாக குடும்பத்துடன் குடியிருந்து வருகின்றேன். எனக்கு கண்ணன், சங்கரபாண்டியன், மாரி என்ற மாரி பாண்டியன் ஆகிய மூன்று மகன்கள் உள்ளனர். சிறிது விவசாயம் உள்ளது. மேலும் ஆடுகளை வளர்த்து வருகின்றேன். இதற்கு முன்பு நான் எனது மகன்களுடன் திருமங்கலம் தாலுகா பொன்னமங்கலம் கிராமத்தில் உள்ள எனது பூர்வீக வீட்டில் குடியிருந்து வந்தேன். பொன்னமங்கலம் கிராமத்தில் உள்ள எனது வீட்டிற்கு எதிரே கூலுச்சாமி தேவர் மகன் முத்து என்பவரின் வீடு இருந்தது. கடந்த 2017-ஆம் ஆண்டு எங்களுக்கும், முத்து வீட்டிற்கும், வீட்டருகில் கழிவுநீர் செல்வது சம்பந்தமாக வாய்த்தகராறு ஏற்பட்டு, இருவர் குடும்பத்தாரும் பேசிக்கொள்வதில்லை. இந்நிலையில் 29.09.2017-ஆம் தேதி எங்கள் இரு குடும்பத்திற்கும் மேலே சொன்ன கழிவுநீர் செல்வது சம்பந்தமாக தகராறு ஏற்பட்டு இருதரப்பினரும் செக்காணூரணி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்ததின்பேரில் இருதரப்பு மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. முத்து கொடுத்த புகாரின் பேரில் எனது குடும்பம் மற்றும் எனது கொழுந்தியா மகன் கமல்பாண்டி மீதும் வழக்கு பதிந்து, என்னை காவல்துறையினர் கைது செய்தனர். எனது மகன் சங்கரபாண்டியன் முன்ஜாமீன் எடுத்துக் கொண்டார். தகராறு நடந்த சமயத்தில் தற்போது கப்பலூர் மதுரை காமராஜர் பல்கலைகழக கல்லூரியில் படிக்கும் எனது மகன் மாரி (எ) மாரிபாண்டி திருமங்கலத்தில் உள்ள எங்கள் உறவினர் ஜெயராஜ் டீக்கடையில் இருந்தார். அதேபோல் கமல்பாண்டி சம்பவ இடத்தில் இல்லாமல், திருமங்கலத்தில் உள்ள K.S.டிராவல்ஸ் அலுவலகத்தில் மைக் செட் கட்டுவதற்கு சென்றிருந்தார். தற்போது கமல்பாண்டி காவலர் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளார். எனவே வழக்கில் இல்லை என்ற தடையில்லா சான்று சம்பந்தப்பட்ட காவல்

நிலையத்தில் தான் பெறவேண்டும் என்று என்னிடம் சொன்னார். உடனே நான், வழக்கில் சம்பந்தப்படாத கல்லூரியில் படிக்கும் எனது மகன் மாரிபாண்டியை வழக்கிலிருந்து விடுவிக்கவும், அதேபோல் வழக்கில் சம்பந்தப்படாத கமல்பாண்டிக்கும் வழக்கிலிருந்து விடுவித்து தடையில்லா சான்று பெற எண்ணி, கடந்த 05.11.2020-ஆம் தேதி மாலை செக்காணூரணி காவல் நிலையம் கமல்பாண்டியுடன் சென்று காவல் ஆய்வாளர் திருமதி.அனிதா அவர்களை நேரில் சந்தித்து கேட்டேன். அப்போது கமல்பாண்டியின் தடையில்லா சான்று கேட்ட மனுவை காவல் ஆய்வாளர் திருமதி. அனிதா அவர்கள் வாங்கி வைத்துக் கொண்டார், மேலும் அவர் வழக்கின் கோப்பினை பார்வையிட்டு, மேற்படி இருவரையும் விடுவிப்பது சம்பந்தமாக சொல்கிறேன் என்று கூறியும், மேலும் எங்களை தீபாவளி முடிந்த பின்னர் வாருங்கள், பேசிக் கொள்ளலாம் என்று கூறி அனுப்பி விட்டார். அதன்படி நான் கடந்த 17.11.2020-ஆம் தேதியன்று சுமார் இரவு எட்டு மணியளவில் மீண்டும் செக்காணூரணி காவல் நிலையம் சென்று காவல் ஆய்வாளர் திருமதி.அனிதா அவர்களை சந்தித்து மேற்படி எனது மகனை விடுவிப்பது மற்றும் கொழுந்தியா மகன் கமல்பாண்டியின் தடையில்லா சான்று பெறுவது சம்பந்தமாக கேட்டேன். அப்போது, திருமதி. அனிதா அவர்கள் உங்கள் வழக்கு கோப்புகளை பார்த்து விட்டேன். நீங்கள் கேட்பது போல செய்ய எனக்கு ஒரு லட்சம் ரூபாய் வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான், சம்பவத்தின்போது எனது மகன் மாரி என்ற மாரிபாண்டி மற்றும் கமல்பாண்டி சம்பவ இடத்திலேயே இல்லை என்று கூறி, மேலும் பணம் அதிகமாக உள்ளது என்றேன். உடனே ஆய்வாளர் அவர்கள் உனக்காக இருபதாயிரம் ரூபாய் குறைத்துக் கொள்கிறேன், எண்பதாயிரம் ரூபாய் கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு நான் தற்போது பணம் இல்லை, குடும்பத்தார்களுடன் பேசிவிட்டு வருகின்றேன் என்று சொல்லி விட்டு வந்து விட்டேன். பின்பு எனது மகன்கள் மற்றும் கமல்பாண்டியுடன் மேற்படி ஆய்வாளர் பணம் கேட்ட விபரத்தை சொன்னேன். அதற்கு அவர்கள் அவ்வளவு பணத்திற்கு ஏங்கே போவது, குறைத்து கேளுங்கள் என்றனர். பின்பு பணம் புரட்ட முயன்றேன், முடியவில்லை. ஆய்வாளரை சந்தித்து குறைக்கலாம் என்று எண்ணி, மீண்டும் கடந்த 23.11.2020-ஆம் தேதியன்று இரவு சுமார் எட்டு மணியளவில் நான், செக்காணூரணி காவல் நிலையத்திற்கு சென்று, காவல் ஆய்வாளர் திருமதி.அனிதா அவர்களை சந்தித்து, வழக்கிலிருந்து எனது மகன் மாரி என்ற மாரிபாண்டி பெயரை நீக்குவது மற்றும் கமல்பாண்டியின் தடையில்லா சான்று குறித்து கேட்டேன். அதற்கு அவர் "நான் கேட்ட எண்பதாயிரம் ரூபாய் கொண்டு வந்து இருக்கிறீர்களா" என்று

என்னிடம் கோபமாக கேட்டார். அதற்கு நான், என்னால் அவ்வளவு பணம் புரட்ட முடியவில்லை என்று கூறினேன். அதற்கு ஆய்வாளர் அவர்கள், பணம் இல்லையென்றால் வேலை நடக்காது, நீங்கள் அலைந்து கொண்டுதான் இருக்க வேண்டும் என்றார். நான் அப்போது கொரனா காலம் என்பதால் வெளியில் எங்கும் செல்ல இயலவில்லை. விவசாயமும் சரியில்லை. கொஞ்சம் குறையுங்கள் என்றேன். அதற்கு ஆய்வாளர் கோபபட்டு, குறைக்க முடியாது, வேண்டுமானால் ரூபாய் முப்பதாயிரத்தை முன் பணமாக 26.11.2020 தேதி இரவு எட்டு மணிக்கு கொடுங்கள், மீதம் ரூபாய் ஐம்பதாயிரத்தை 30.11.2020ம் தேதி என்னை பார்த்து கொடுங்கள் என்றும், பணத்தை கொடுத்தால்தான், மாரி என்ற மாரிபாண்டி பெயரை வழக்கிலிருந்து நீக்கி, அதேபோல் தடையில்லா சான்று கமல்பாண்டிக்கு கொடுக்க ஏற்பாடு செய்ய முடியும் என்றும் கறாறாக கூறிவிட்டார். எந்த தகராறிலும் ஈடுபடாத எனது மகன் மாரி என்ற மாரிபாண்டி பெயரை நீக்கி மற்றும் அதேபோல் பெயர் நீக்கம் செய்து, கமல்பாண்டிக்கு தடையில்லா சான்று வழங்க ஏற்பாடு செய்ய காவல் ஆய்வாளர் திருமதி. அனிதா அவர்களுக்கு ரூபாய் எண்பதாயிரம் லஞ்சம் கொடுக்க எனது மனம் விரும்பவில்லை. எனவே, அவர் லஞ்சமாக கேட்ட முன்பணம் ரூ.30,000/-த்தை 26.11.2020-ஆம் தேதி மாலை அவரது காவல்நிலையத்தில் சந்தித்து கொடுக்க மனம் விரும்பாமல் நடவடிக்கை எடுக்க அவர் கேட்ட ரூபாய் முப்பதாயிரம் கொண்டு வந்துள்ளேன். மேலும், எங்கள் மீது போடப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல், கமல்பாண்டி காவலர் தேர்விற்கு விண்ணப்பித்த மனு நகல் மற்றும் செக்காணூரணி காவல் நிலையத்தில் கமல்பாண்டி தடையில்லா சான்று கேட்டு கொடுத்த மனுவின் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். எனவே, என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட செக்காணூரணி காவல் நிலைய காவல் ஆய்வாளர் திருமதி.அனிதா அவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். படிக்க கேட்டேன். நான் சொன்னபடி சரியாக இருந்தது. இப்படிக்கு, (ஒ-ம்) S நல்லதம்பி, 26.11.20.

Sir, Received the complaint on 26.11.2020 at 15.00 hrs, the genuineness of the complaint was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range,

Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai Vigilance and Anti Corruption in Cr. No.11/2020 u/s 7 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 15.30 hrs and took up investigation. Sd/-XXXX (T.Suriyakala) Inspr. of Police, V&AC, Madurai. 26/11/2020.

Original FIR along with original written complaint of Tr.S.Nallathambi, S/o. Santhana Thevar, Eramalampatti, Santhangudi (Post), Thirumangalam Taluk, Madurai District, copy of F.I.R. in Checkanurani P.S. Cr.No. 577/2017, copy of Application of Kamalpandi for Police Constable Recruitment, copy of petition of Kamalpandi requesting N.O.C. at Checkanurani PS are submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of Cases under Prevention of Corruption Act, Madurai and copy of FIR is submitted to the Director of Vigilance and Anti Corruption, Chennai.

(T. Suriyakala) 26.11.2020
Inspector of Police,
Vigilance & Anti – Corruption,
Madurai.